புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கொல்லிமலை கொல்லிப்பாவை எனும் எட்டுக்கை அம்மன் – வழிபாட்டு முறைமைகள்

இரா. சம்பத்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்-641014.

ஆய்வுச்சுருக்கம்

கொல்லிமலையில் கொல்லிப்பாவை என்று அழைக்கப்படும் எட்டுக்கை அம்மன் தொன்றுதொட்டு வழிபட்டு வரும் நாட்டார் தெய்வமாக அறியப்படுகிறது. இத்தெய்வம் நாமக்கல் மாவட்டத்தில், கொல்லிமலையில் உள்ள மேகலிங்கம்பட்டியில் அமைந்துள்ளது. இந்த கோயிலின் அமைப்பானது, தென்னை கீற்றினால் வேயப்பட்ட கூரையினால் அமைக்கப்பட்டுள்ளது. கொல்லிப்பாவை தெய்வமானது ஐந்தடி உயரத்தில் எட்டுக்கைகளுடன் அரக்கனை காலால் மிதித்து வதம் செய்யும் வடிவில் உள்ளது. இத்தெய்வம் எப்பொழுதும் சந்தன காப்புடன் காட்சியளிக்கிறது. நாட்டுப்புற மக்களின் வழிபாட்டுத் தலமாக இருந்த இக்கோயிலுக்கு, தமிழகம், இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து மக்கள் வந்து வழிபட்டுச் செல்லுமளவிற்கு புகழ்பெற்றதாக விளங்குகிறது. இச்சிறப்புமிக்க கோயிலின் வழிபாட்டு முறைகள் குறித்து இக்கட்டுரை விவரிக்கிறது.

## முன்னுரை

தெய்வத்தை வழிபடும் வழக்கம் பழங்காலத் தொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. தங்களுடைய எண்ணங்களை தெய்வங்களிடம் வேண்டுதல்களாக முன்வைத்து வழிபட்டு வருகின்றனர். வேண்டுதல்கள் நிறைவேறுவதற்காக அத்தெய்வத்திற்குப் பல்வேறு நேர்த்திக்கடன்களை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு தெய்வங்களுக்கும் ஒவ்வொரு விதமான நேர்த்திக்கடன்கள் சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. அவ்வகையில் கொல்லிப்பவை எனும் எட்டுக்கை அம்மன் கோவிலில் மக்களின் வேண்டுதல் முறைகளை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

## ஆய்வு நெறிமுறைகள்

இந்தக் கட்டுரையில் கள ஆய்வு நெறிமுறை பின்பற்றப்பட்டுள்ளது. கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களைப் பகுத்தும் தொகுத்தும் விளக்கியும் கூறப்பட்டுள்ளது. கொல்லிமலை எட்டுக்கை அம்மன் எனும் கொல்லிப்பாவை தெய்வத்தின் வழிபாட்டு முறைகளைத் தகவலாளர்களிடம் பெற்ற தரவுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## வழிபாட்டு முறைமைகள்

மக்களின் வேண்டுதல்கள் பல்வேறு முறைகளில் அமைந்துள்ளது. அவற்றை மக்கள் மிக நுட்பமாக, இரகசியமாகப் பாதுகாக்கின்றனர். அந்த இரகசியங்களை வழிபாட்டின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள மக்கள் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அந்த வகையில்,

1. மக்களால் நிகழ்த்தப்படும் வழிபாடு
2. பூசாரி மூலம் நிகழ்த்தப்படும் வழிபாடு

இந்த இரு பகுப்பு அடித்தளமாக அமைகிறது. அதை ஆராய்ந்து வெளிப்படுத்துவது இந்த ஆய்வின் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

*1. மக்களால் நிகழ்த்தப்படும் வழிபாடு*

*மக்கள் தாங்கள் எண்ணிய செயல்களை அவர்களே முன்னின்று வழிபாடு நிகழ்த்தி தன்னிறைவு அடைந்து கொள்வது இதில் முக்கிய அங்கமாகிறது. இந்த வழிபாடானது,*

1. *தகடு கட்டுதல்*
2. *புடவை சார்த்துதல்*
3. *துணி கட்டுதல்*
4. *தொட்டில் கட்டுதல்*
5. *பூட்டு கட்டுதல்*
6. *பலியிடுதல்*
7. *கல்வீடு அமைத்தல்*
8. *விளக்கு ஏற்றுதல்*
9. *மணி கட்டுதல்*
10. *கயிறு கட்டுதல்*

*என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.*

*தகடு கட்டுதல்*

*தான் எண்ணிய காரியங்களை தகடு அல்லது காகிதங்களில் எழுதி அதை அம்மனுக்குச் சார்த்துதல் மூலம் வேண்டுதல் நிறைவேறும் என்று மக்கள் நம்பிக்கை கொள்கின்றனர். தூண், மரம் போன்றவற்றிலும் கோயிலுக்குள் அம்மனுக்கு உகந்த இடத்திலும் தான் எண்ணிய காரியத்திற்காகத் தகடு கட்டுகின்றனர். இதனால் பொருளாதார இழப்பு ஏற்பட்டாலும் அதில் கவலை கொள்ளாது இவ்வழிபாட்டு முறையை மேற்கொள்கின்றனர்.*

*இந்த வழிபாட்டு முறைக்கு தொன்மக் கதை கூறப்படுகிறது. சோழ மன்னன் தனது தந்தை இறந்த பிறகு கவலையுடன் இருந்தான். இதனால் நிர்வாகத்தில் பொரும் சிக்கல் ஏற்படுகிறது. அவனது கவலையைப் போக்கி நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டி மக்கள் தகடு எழுதி கட்டினர். அதன்பிறகு சோழ மன்னன் கவலை மறந்து சிறப்பாக ஆட்சி செய்தான் என்று கூறப்படுகிறது. மக்கள் காகிதத்தில் தான் வேண்டியவற்றை எழுதி அதை மாலையாகக் கட்டி தெய்வத்தின் கழுத்திலோ அல்லது கோவிலில் உள்ள மரத்திலோ கட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அப்படியான வழிபாட்டு முறையே இக்கோவிலில் புது வடிவம் பெற்றுள்ளது.*

*எட்டுக்கை அம்மன் கோவிலுக்கு அருகில் பித்தளை தகடு விற்கப்படுகிறது. அதற்கு குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்படுகிறது. சக்கரம் பொறிக்கப்பட்ட அத்தகடில் பக்தர்கள் அம்மனை நன்றாக மனதில் வேண்டிக்கொண்டு தம் வேண்டுதலைக் கூர்மையான பொருளைக் கொண்டு எழுதுகின்றனர். பின்பு பூசாரி கொடுக்கும் நூலைக் கொண்டு அந்த தகடைச் சுருட்டி நன்றாகக் கட்டி, தெய்வத்தை வேண்டி கோவிலில் உள்ள மரம், வேல் முதலானவற்றில் அதைக் கட்டுவதற்கு முன்பு, அங்குள்ள வேலின் முன்வைத்து பூசிக்கப்படுகிறது. அத்துடன் வேண்டுதலின் பலன்வேண்டி எழுமிச்சைப் பழத்தை வேலில் குத்துகின்றனர். இதன்மூலம் மனதில் எண்ணியது நிச்சயமாக நிறைவேறும் என்று நம்பிக்கை கொள்கின்றனர்.*

*புடவை சார்த்துதல்*

*எட்டுக்கை அம்மனுக்குப் புடவை சார்த்தும் சடங்கானது பல ஆண்டுகளாக நீடித்து வருவதாக அறியப்படுகிறது. புடவை சார்த்துதல் மூலம் தனது கணவனின் உடல்நலத்தைப் பேணுதல், தன்னுடைய உடல்நலத்தைப் பேணுதல், குடும்ப உறவிற்குள் இணக்கமான உறவை மேற்கொள்ளுதல் என்பதாகக் கருதப்படுகிறது. புடவை சார்த்துதல் மூலம் தனது நியாயங்களை நிரூபித்துக் கொள்வதாக மக்கள் நம்புகின்றனர்.*

*துணி கட்டுதல்*

*எட்டுக்கை அம்மனுக்கு துணி கட்டுதல் சிறப்பான நடைமுறைச் சடங்காக உள்ளது. வேண்டியன நிறைவேறுதல், குடும்பத்தில் நிலவும் அசாதாரணமான சிக்கல்களை விலக்குதல் என்பவை இவ்வழிபாட்டு முறையில் சிறப்புக் கூறுகளாக அறியப்படுகிறது. கணவன் மனைவிக்கு இடையிலான பிரச்சனை, காதல் பிரிவு, உறவினர் பிரிவு ஆகியவற்றில் பிரிந்து போனவர்களின் உடையையும், தங்களது உடையையும் இணைத்துக் கட்டுகின்றனர். அதற்கு*

*சிறப்பு பூசையும் செய்யப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் 48 நாட்களில் ஒன்றிணைவர் என்று நம்பப்படுகிறது.*

*தொட்டில் கட்டுதல்*

*குழந்தை வரம் வேண்டி வழிபாடு செய்பவர்களுக்கு விரைவில் அவ்வரம் நிறைவேறுவதில் சிறப்பு பெற்ற தெய்வமாக எட்டுக்கை அம்மன் இருப்பதை அப்பகுதி மக்கள் வாயிலாக அறியமுடிகிறது. திருமணமாகி நெடுநாள் குழந்தை இல்லாதவர்கள் இவ்வம்மனை வேண்டி பூசை செய்து, கோவிலில் உள்ள ஒரு கல்லை எடுத்து துணியினுள் வைத்து அதைத் தொட்டிலாக பாவித்து அங்குள்ள மரத்தில் கட்டுவர். இதன்மூலம் அவர்கள் மூன்று மாதத்திற்குள் கருவுறுவர் என நம்பிக்கை கொள்கின்றனர். தாங்கள் விரும்பிய குழந்தை பெண் குழந்தையோ, ஆண் குழந்தையோ வேண்டும் என்பவர்கள் தகடு கட்டுவது மட்டும் அல்லாமல் தொட்டில் கட்டியும் தங்கள் விரும்பும் குழந்தையை சாமியிடம் வேண்டிக்கொள்கின்றனர்.*

*பூட்டு கட்டுதல்*

*நெடுநாட்களாக நிலவி வரும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சனைகளுக்கும் வழக்கு பிரச்சனைகளுக்கும் பூட்டு கட்டுதல் வழிபாடு நிகழ்த்தப்படுகிறது. சொத்துப் பிரச்சனை, நிலப் பிரச்சனை, நீதிமன்ற வழக்கு பிரச்சனை ஆகியவை விரைந்து முடிவிற்கு வர கோவிலில் அம்மனை வழிபட்டு பூசை செய்து அம்மன் முன்புள்ள ஊஞ்சலில் தாங்கள் வாங்கிவந்த பூட்டை பூட்டுவர். இதன்மூலம் அப்பிரச்சனைகள் தீர்வு பெறும் என்று நம்பிக்கை கொள்கின்றனர்.*

*பலியிடுதல்*

*நாட்டுப்புற வழிபாட்டு முறைகளில் பலியிடுதல் முக்கிய வழிபாட்டு முறையாக உள்ளது. இந்த பலியிடுதலில் ஆண் இனத்தைச் சார்ந்த விலங்குகள், பறவைகள் மட்டுமே பலியிடப்படுகின்றன. இதற்குக் காரணமாக,*

*“சமூக ஒடுக்குதலின் ஆவேச நிலையில் தெய்வமடைந்த பெண்கள் தங்கள் ஒடுக்கப்பட்ட ஆழ்மனவெளிப்பாடாக ஆண் குறியீடுகளை உயிர்ப்பலிகளாகப் பெற்றனர் என்றும் இதனாலே ஆண்மகன், ஆண் எருமை, ஆண் ஆடு, ஆண் கோழி என்ற வரிசை ஆண் குறியீடாய்ப் பலி கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிடப்படுகிறது“ (பக்தவத்சலபாரதி, 2019, ப. 199)*

*என்று பக்தவத்சல பாரதி எடுத்துரைக்கிறார். இதேபோன்று தொ. பரமசிவன்,*

*“இரத்த பலி என்பது பொதுவாக ஆண் விலங்குகளையும் பறவைகளையுமே குறிக்கும். உயிர்ப்பெருக்கத்திற்குக் காரணமான பெண் உயிரிகளைப் பலி கொடுத்தால் தெய்வம் தண்டிக்கும் என்ற தொன்மையான நம்பிக்கையே ஆணினத்தைப் பலியிடுவதற்குக் காரணம்“ (தொ. பரமசிவம், 2022, ப. 118)*

*என்று குறிப்பிடுகிறார். இந்த பலியிடல் முறை பெண் தெய்வங்களும் ஆண் தெய்வங்களுக்கும் கொடுக்கப்படுகிறது.*

*தகடு கட்டுதல், பூட்டு கட்டுதல், துணி கட்டுதல், தொட்டில் கட்டுதல் போன்ற வழிபாட்டு முறை வேண்டுதல் நிறைவேறிய பிறகு எட்டுக்கை அம்மனுக்கு ஆடு, கோழி பலியிடப்படுகிறது. கோவில் வளாகத்திற்குள் பூசை செய்து பலியிடப்படும் ஆடு, கோழி மீது மஞ்சள் கலந்த தண்ணீர் ஊற்றி அனுமதி பெறுகின்றனர். அது அனுமதி கொடுத்த பிறகு, பலியிடுதல் கோவில் வளாகத்திற்குள் நடத்தப்படுவதில்லை. அது கோவிலிலிருந்து நூறு அடி தூரம் தள்ளி வெளிப்புறத்தில் நிகழ்த்தப்படுகிறது. அம்மனுக்கு எவ்வித படையல் வைக்கும் வழக்கம் காணப்படவில்லை.*

*கல்வீடு அமைத்தல்*

*மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று இருப்பிடம் ஆகும். அந்த இருப்பிடத்திற்காக மனிதர்கள் அல்லும் பகலும் உழைக்கின்றனர். அனைவரும் வாழ்வதற்குச் சொந்தமாக ஒரு வீடும் அத்தியாவசியமானது என்று நம்பிக்கை கொண்டு உழைத்து வருகின்றனர். அப்படி வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் மக்கள் கடவுளை வழிபடுகின்றனர். அதற்கான ஒரு வழிபாட்டு முறைதான் கல்வீடு அமைத்து தெய்வத்தை வழிபடுதல் ஆகும். இந்த வழிபாட்டு முறை எட்டுக்கை அம்மன் கோவிலில் காணப்படுகிறது.*

சிறு பலகைக் கற்களைக் கொண்டு அடுக்கடுக்காக வைத்து கல்வீடு அமைக்கின்றனர். அவ்வாறு அமைத்தலுக்கு எத்தனை கல்வைத்து அடுக்குகிறார்களோ அந்த அளவிற்கு வீடு கட்டுவர் என்று நம்பிக்கை நிலவுகிறது. இவ்வாறான கற்களால் அடுக்கி வைக்கப்பட்டுள்ள கல்வீடுகள் அங்கு நிறைந்து காணப்படுகிறது. மனிதனின் ஆசைகள், எண்ணங்கள் பெரும்பாலும் இறைவனால் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. அதன்படி எட்டுக்கை அம்மன் கோவிலுக்கு அருகே பலகைக் கற்களை ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கி அதை வைத்து வேண்டினால் விரைவில் புதிய வீடு கட்டமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

*விளக்கு ஏற்றுதல்*

விளக்கு ஏற்றி வழிபடும் வழக்கம் தற்போது அனைத்து கோவில்களிலும் நடைமுறையில் இருந்து வருகிறது. கல்வி, திருமணம் ஆகியவற்றிற்காக விளக்கேற்றி வழிபடுகின்றனர்.

எட்டுக்கை அம்மன் கோவிலில் உடல்நலம் பெற விளக்கேற்றும் வழிபாடு சிறப்பு வாய்ந்ததாக காணப்படுகிறது. கோவில் வளாகத்தில் அமைந்துள்ள விநாயகர் முன்பு தாங்கள் வாங்கிவந்த மண்விளக்கில் திரி வைத்து நல்லெண்ணெயை ஊற்றி விளக்கேற்றி வழிபடுகின்றனர். இது தகடு கட்டிய பிறகு நடைபெறுகிறது.

*மணி கட்டுதல்*

தங்கள் வேண்டுதல் நிறைவேறவும் நிறைவேறிய வேண்டுதலுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் மணி கட்டுதல் வழிபாடு அமைந்துள்ளது. எட்டுக்கை அம்மன் கோவிலில் அமைந்துள்ள தாழ்வாரங்களில் மணிகளைக் கட்டுகின்றனர்.

*கயிறு கட்டுதல்*

கோவில்களில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு கயிறுகளைக் கட்டுதல் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. எட்டுக்கை அம்மன் கோவிலில் சிவப்பு கயிறு கட்டும் வழக்கம் காணப்படுகிறது. தீய சக்திகள் மூலம் பாதிப்பு ஏற்படாமல் இருக்க இக்கயிறுகளைக் கட்டுகின்றனர். இக்கோவிலில் ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் அம்மனை வேண்டி சிவப்பு நிற கயிறு பூசாரியால் கட்டப்படுகிறது.

*2. பூசாரி மூலம் நிகழ்த்தப்படும் வழிபாடு*

கொல்லிமலை எட்டுக்கை தெய்வமானது நல்லதுக்கானது என்றும் அல்லதுக்கானது என்றும் அப்பகுதி மக்களால் காலந்தோறும் நம்பப்பட்டு வருகிறது. தங்களது நலனுக்காக வேண்டி வரும் பக்தர்களும் உண்டு. தங்களுக்குக் கெடுதல் நினைப்பவர்களுக்குத் தீங்கு நேரிட வேண்டி வரும் பக்தர்களும் உள்ளனர். இந்தவகையில் பூசாரி மூலம் நிகழ்த்தப்படும் வழிபாடானது இரண்டாவது வகையைச் சார்ந்தது. செய்வினை நீக்குதல், செய்வினை செய்து வைத்திருப்பவர்களுக்கு ஏதேனும் தீங்கு விளைவிக்க பூசை செய்தல் என்ற முறையை கடைபிடிப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு நிகழ்த்தப்படும் வழிபாட்டு முறையில்,

1. சாமியாடுதல்
2. பில்லி சூனியம் வைத்தல், எடுத்தல்
3. வசியம் செய்தல்
4. பரிகார பூசைகள்

என்பவை முக்கியமானதாக அமைந்துள்ளது.

*சாமியாடுதல்*

தங்களுடைய பிரச்சனைகளை நேரடியாக இறைவனே வந்து, கேட்டு பூசாரியின் மூலம் அதற்கான தீர்வைச் சொல்லுவதாக மக்கள் நம்பும் ஒரு நம்பிக்கையே சாமியாடி குறி சொல்லுதலாகும். சாமியாடுபவர்கள் பெரும்பாலும் பெண்கள்தான். ஆனால் கோவிலில் பூசாரிகளாக இருக்கும் ஆண்கள் சாமியேறி பக்தர்களுக்கு குறி அல்லது வாக்கு சொல்லுவார். ஆணிவைத்த பாதணியின்மீது நின்று குறி சொல்லும் வழக்கம் காணப்படுகிறது.

எட்டுக்கை அம்மன் கோவிலில் பூசை செய்யும் பூசாரி, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் சிறப்பு பூசை முடிந்தபிறகு காலை 10 மணிக்கு குறி சொல்லும் நிகழ்வு தொடங்குகிறது. கோவிலுக்கு வந்திருக்கும் பக்தர்களை அழைத்து அவர்களின் பிரச்சனைகளைக்

கேட்டறிந்து, அப்பிரச்சனைக்கான பரிகாரம், பூசையைக் கூறி அதற்கான தீர்வுகளை தெய்வ வாக்காகக் கூறுகிறார். இதன்மூலம் தங்கள் பிரச்சனைகளை இறைவனே தீர்த்ததாகப் பக்தர்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

செய்வினை வைத்தல், எடுத்தல்

செய்வினை செய்தல் என்பது நாட்டுப்புறங்களில் காணலாகும் அம்சம். தங்களது வாழ்க்கையில் பிரச்சனை உருவாக செய்வினை செய்து வைத்திருப்பதை பூசாரியிடம் சென்று கண்டறிந்து அதை எடுக்கின்றனர். தங்களுக்கு கெடுதல் நினைப்பவர்களுக்கு இவர்கள் செய்வினையும் அல்லது தீங்கு வர நேர்த்திக்கடன்களையும் செய்கின்றனர்.

அதுபோல எட்டுக்கை அம்மன் கோவிலில் செய்வினை செய்தல், எடுத்தல் நிகழ்வு காணப்படுகிறது. சாமியாடுதல் நிகழ்வின் போது எட்டுக்கை அம்மன் பூசாரியின் மீது இறங்கி குறி சொல்லும்போது தங்களுக்கு வைக்கப்பட்டுள்ள செய்வினை குறித்து அறிந்து கொள்கின்றனர். அதனை நிவர்த்தி செய்ய சிறப்பு பூசைகள் நிகழ்த்தப்படுகின்றன.

இதேபோல் தங்களுக்கு தீங்கு நினைப்பவர்களுக்குத் துன்பம் நேரிட செய்வினை வைத்தல் நிகழ்வும் காணப்படுகிறது. இது பூசாரியின் சிறப்பு பூசையின் மூலம் நிகழ்த்தப்படுகிறது.

வசியம் செய்தல்

எட்டுக்கை அம்மன் கோவிலில் வசியம் செய்தலுக்கான பூசை பூசாரிகளால் நிகழ்த்தப்படுகிறது. பிரிந்த உறவினர்கள் சேர, கணவன் மனைவி இணைய, காதல் பிரச்சனை, பிரிந்த இரத்த உறவுகள் ஒன்றிணைய இந்த வழிபாட்டு முறை நடத்தப்பெறுகிறது. இது துணி கட்டுதல் வழிபாட்டு முறையோடு தொடர்புடையதாக இக்கோவிலில் அமைந்துள்ளது.

பரிகார பூசைகள்

தங்களது வேண்டுதல்கள் நிறைவேறாமல் காலம் கடந்து செல்லும்போது பரிகார பூசைகள் செய்யப்படுகின்றன. அது பூசாரி சாமியாடுதல் மூலம் இவர்களுக்கு பரிகாரத்தை அருள்வாக்காக கூறுகிறார். அதைக் கேட்டறிந்து குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த பரிகாரத்தைச் செய்து முடிக்கின்றனர்.

முடிவுரை

மக்களால் நிகழ்த்தப்படும் வழிபாட்டில் தகடு கட்டுதல், துணி கட்டுதல், பூட்டு கட்டுதல் போன்றவை இந்த கோயிலில் காணப்படும் தனித்துவமாகும்.

தாங்கள் எண்ணியவற்றை விரைந்து நிறைவேற்ற எட்டுக்கை அம்மனுக்கு மக்கள் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகளை மேற்கொள்கின்றனர். இதனால் அவர்களுக்கு தீர்வுகள் கிடைப்பதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

பூசாரியால் நிகழ்த்தப்படும் வழிபாட்டில் பெரும்பாலும் பூசாரியின் பங்கு அதிகமானதாக உள்ளது. இதில் எட்டுக்கை அம்மன் வழிபாட்டு முறைக்கும் பூசாரியால் நிகழ்த்தப்படும் வழிபாட்டு முறைக்கும் தொடர்பில்லை. சாமியாடுதல் முறையானது பொது அம்சமாக அமைந்துள்ளது.

எட்டுக்கை அம்மன் சக்திவாய்ந்த தெய்வமாகப் பலதரப்பட்ட மக்களிடையே நம்பிக்கை நிலவுகிறது. அத்தெய்வத்தை வேண்டி வணங்கினால் அந்த வேண்டுதல் விரைந்து நிறைவேறும் என்ற நம்பிக்கையில் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் வருகின்றனர். இதனால் அக்கோயிலை பொருளீட்டும் தலமாக அப்பகுதி மக்கள் மாற்றி வரும் சூழ்நிலையும் உள்ளது.

துணைநின்ற நூல்கள்

1. பக்தவத்சலபாரதி, 2019, தமிழர் மானிடவியல், மூன்றாம் பதிப்பு, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம் - 621310
2. தொ. பரமசிவன், 2022, தெய்வங்களும் சமூக மரபுகளும், முதல்பதிப்பு, காலச்சுவடு, 669, கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001.

********* ********* ********** ********* ********* ********** ********* **********